[18th July 1964

MR. SPEAKER : The hon. Member has put a specific question regarding 'Sitheri Agricultural Bank".

திரு. எஸ். ஜே. ராமசாமி : அந்த கிராமத்தின் எல்லையில் உள்ளது . . .

கனம் சபாநாயகர் : எந்த ஊரில் ?

திரு. எஸ். ஜே. ராமசாமி : சித்தேரி, அரக்கோணம் தாலுகா.

கனம் சபாநாயகர் : அதற்குத்தான் அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : சித்தேரியின் பக்கத்தில் இருக்கிற ஊர்.

கனம் சபாநாயகர் : என்ன ஊர் ?

திரு. எஸ். ஜே. ராமசாமி : சித்தேரியின் பக்கத்தில் இருந்தாலும் அந்தப் பக்கத்து மக்கள் . . .

MR. SPEAKER : The hon. Member may make it clear and renew the question later, if he wants.

* 534 கேள்வி—திரு. சி. சிவசுப்ரமணியன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, எடையார் கிராமத்தில் கூட்டுறவு விவசாய பாங்கு வேண்டுமென்று கிராம ஜனங்கள் அரசாங்கத்திற்கு அண்மையில் ஏதேனும் மனு செய்துள்ளார்களா ?

(இ) அப்படியானால், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சாக்கரை மன்றாடியார் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Cost of cultivation

* 535 *Q.*—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the particulars regarding the cost of cultivation have been collected for each crop district-war; and

(*b*) if so, whether it will be placed on the table of the House?

THE HON. SRI P. KAKKAN : (*a*) A survey to estimate the cost of cultivation of rice alone was conducted in the two districts of Thanjavur and Coimbatore for fasli 1372 (1962–63).

(*b*) The processing and analysis of the data collected is in progress and a report will be prepared on completion of this work.

18th July 1964]

(அ) 1372-ம் பசலியில் (1962-63) தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் அரிசிக்கு மட்டும் ஆகும் சாகுபடிச் செலவை மதிப்பிட சர்வே ஒன்று நடத்தப்பட்டது.

(இ) சேகரித்த புள்ளிவிவரங்களைத் தொகுத்து ஆராயும் வேலை நடந்து வருகிறது. இவ்வேலை பூர்த்தியானவுடன் ஓர் அறிக்கை தயாரிக்கப்படும்.

பாலம் கட்டுதல்

*537 கேள்வி.—திரு. செ. சீனிவாசன் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மதுரை-இராமநாதபுரம் சாலையையும் பரமக்குடி நயினர் கோவில் சாலையையும் இணைத்துப் பரமக்குடி நகரில் கிழக்கு சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள வைகை ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று அமைக்கும் உத்தேசமுண்டா ?

(இ) இல்லையெனில், பரமகுடி, எமனேசுவரம் நகர்களிலுள்ள நெசவாளர்களுக்கு உதவியாக ஓரளவு கடனாகவும், ஓரளவு மானிய மாகவும் பெறும் அடிப்படையில் பாலம் கட்டுவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) மேற்கூறிய இடத்திலிருந்து சுமார் ஆறு பர்லாங்கு தூரத்தில் ஏற்கனவே ஒரு பாலம் இருப்பதால், இங்கு பாலம் கட்டு வதற்கு அவசரம் ஏதுமில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

*538 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டம், நிலக்கோட்டை தாலுக்கா வத்தகுண்டு பிர்க்காவில் உள்ள ரங்கப்பநாயக்கன்பட்டி, ராமநாயக்கன்பட்டி கிராமங்களை இணைத்து வைகையில் ஒரு பாலம் அமைக்கும் உத்தேச முண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இந்தப் பாலமானது மிகவும் அவசியம். மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்த பிறகு இதற்கு ரூ 2 3/4 லட்சத்திற்கு எஸ்டிமேட் போடப் பட்டது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி யானால் இதை மறுபரிசீலனை செய்து அங்கே இந்த பாலத்தை அமைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ரூ. 2.75 லட்சத்திற்கு எஸ்டிமேட் போடப்பட்டது. எஸ்டிமேட் போட்டுவிட்டால் உடனே பாலம் கட்டுவது என்று அர்த்தமில்லை. இது இரண்டு கிராமங்களுக்குத்